சாலையை அமைக்கக் கூடிய அந்தத் திட்டம் எத்தனை கோடியில் அமைக்கப்பட இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: தலைவர் அவர்களே, இது கோடிக் கணக்கில் அல்ல. திருவள்ளூர் தொகுதி கீழ்நாத்தூர் கிராமத்தில் செங்கல் சூளை அமைப்பதற்கான சாத்தியக் கூறு உண்டா என்பதைப் பற்றி ஆராய்ந்து அந்தப் பகுதியிலுள்ள மண் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டு—அங்கே ஒரு செங்கல் சேம்பர்—நவீன முறையில் செங்கற்களைத் தயாரிக்கின்ற ஒரு தொழிற்சாலை அமைப்பதற்கான வாய்ப்பு உள்ளது எனக் கருதி அதுபற்றிய ஒரு குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. இது அரசின் சார்பாக ஆரம்பிக்கப்படாமல் அந்தப் பகுதியிலே உள்ள ஆதிதிராவிடர்கள் 100 பேர்களைக் கொண்ட ஒரு கூட்டுறவுச் சங்கமாக அமைத்து அந்த சங்கத்தின் மூலமாக அந்தத் தொழிற்சாலை இயங்குவதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரப்படும்.

10.00 மணி

திரு. எஸ். ஆர். முனிரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல் சூளை அமைக்க நல்ல முறையில் மண் பரிசோதனை செய்து, 100 பேருக்கு வாய்ப்பு அளிக்கக் கூடிய அந்த தொழிற் சாலையை அமைக்கக் கூடிய செயற் குறிப்பு அரசிடம் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதற்கு நன்றி......................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் ஒப்புதலோடு வினா நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. முனிரத்தினம் அவர்கள் நன்றி தெரிவித்துவிட்டார்கள். அடுத்த வினா.

மந்தியூர் கிராமத்தில் ஆதிதிராவிட நலத்துறை மூலம் தொடக்கப்பள்ளி

* 823—திரு. கே. ரவி அருணன்:

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், கடையம் ஊராட்சி ஒன்றியம் மந்தியூர் கிராமத்தில் ஆதி திராவிடர் நலத்துறையின் மூலம் தொடக்கப்பள்ளி துவங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

1990 சனவரி 25]

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், கடையம் ஊராட்சி ஒன்றியம் மந்தியூர் கிராமத்தில் ஆதிதிராவிடர் நலத் துறை மூலம் தொடக்கப்பள்ளி துவங்குவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பழங்குடி மக்களாக அறிவித்தல்.

*3546—திரு. ந. நஞ்சப்பன் :

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தருமபுரி மாவட்டத்தில் குரும்ப, குருப, குரும்மஸ், குரும்பன்கள், குரும்பர்கள் என்று பலவிதமாக அழைக்கப்படும் மக்களை பழங்குடி மக்களாக அரசு அறிவிப்பு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

தமிழகத்தில் உள்ள குருமா, குரும்பர், குரும்பன்கள், குரும்பார்கள், இனத்தவர்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பது மத்திய அரசின் ஆய்வில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ந. நஞ்சப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரியில் உள்ள குரும்பன், குரும்பாஸ் என்ற மக்கள் ஒரே வகையைச் சேர்ந்தவர்கள், வட ஆற்காடு, பெரியார் போன்ற மாவட்டங்களில் பழங்குடிகளாக அங்கீகரிக்கப்பட்ட மக்கள், தர்மபுரி மாவட்டத்தில் மட்டும் இன்னும் அங்கீகரிக்கப்பட வில்லை. அதில் குரும்பர்கள, குரும்பாஸ் என்ற எழுத்தை தமிழில் எழுதினால் பிற்பட்டவர்களாகவும் ஆங்கிலத்தில் குறித்தால் பழங்குடி மக்களாகவும் அங்கீகரிக்கப்படுகின்ற நிலையை மாற்றி, இரண்டு விதமாக எழுதினாலும் பழங்குடி மக்களாக அறிவிக்கப் படுகின்ற நிலையை அரசு கொண்டு வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அது பற்றி அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.